செ.வெ.எண்.52 நாள்: 19.12.2020

தூத்துக்குடி மாவட்டத்தில் 7-வது பொருளாதார கணக்கெடுப்பு பணியினை செவ்வனே செய்து முடித்திட களநிலையில் பணியாற்றும் கணக்கெடுப்பாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கு பொதுமக்கள் மற்றும் நிறுவனங்கள் தக்க ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் - தூத்துக்குடி மாவட்ட 7-வது பொருளாதார கணக்கெடுப்பு தலைவர் / மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் கி.செந்தில் ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்

---

இந்தியா முழுவதும் ஏழாவது பொருளாதார கணக்கெடுப்பு களப்பணி நடைபெற்று வருகின்றது. தூத்துக்குடி மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் கணக்கெடுப்பு பணியானது 29.10.2019 அன்று தொடங்கப்பட்டு, பொது சேவை மையங்கள் (CSC) மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட கணக்கெடுப்பாளர்களால் கிராமப்புறம் மற்றும் நகர்ப்பகுதிகளில் வீடுகள் மற்றும் நிறுவனங்கள் தோறும் களப்பணி 7வது பொருளாதார கணக்கெடுப்பு செயலி (7th EC Mobile App) வழியாக நடைபெற்று வருகிறது.

இக்கணக்கெடுப்பில் வேளாண் உற்பத்தி தவிர்த்து, பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடும் பெரிய நிறுவனங்கள் முதல் சிறு நிறுவனங்கள் வரை தொழில் சார்ந்த, உற்பத்தி சார்ந்த, சேவை சார்ந்த மற்றும் அமைப்பு சாரா நிறுவனங்கள் விவரமானதும் மற்றும் வீட்டிற்குள்ளே நடைபெறும் சிறு, குறுந்தொழில் குறித்த விவரங்களும், அந்நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்கள் உள்ளிட்ட விவரங்களும் மற்றும் வீடுகளில் உள்ள குடும்ப உறுப்பினர்கள் விவரங்களும் சேகரிக்கப்படுகின்றன.

தூத்துக்குடி மாவட்டத்தில் 7-வது பொருளாதார கணக்கெடுப்பு பணியினை செவ்வனே செய்து முடித்திட களநிலையில் பணியாற்றும் கணக்கெடுப்பாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கு பொதுமக்கள் மற்றும் நிறுவனங்கள் தக்க ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என தூத்துக்குடி மாவட்ட 7-வது பொருளாதார கணக்கெடுப்பு தலைவர் / மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் கி.செந்தில் ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.